சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை – பழங்குடியினர் மேம்பாடு – மாண்புமிகு அமைச்சர் (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்) அவர்களால் 18.07.2017 அன்று சட்டமன்ற பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்பு – பழங்குடியின விவசாயிகள் துரிதமாக மின் இணைப்பு பெறுவதற்கு ரூ.75,000/– வீதம் 100 பேர் பயன்பெறுவதற்காக விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ரூ.75 இலட்சத்தினை தாட்கோ மூலமாக தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு வைப்பீடு தொகையாக வழங்குதல் – நிதி ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் [ப.மே1(2)] துறை

அரசாணை (ப) எண்.251

நாள் 09.10.2017
ஹேவிளம்பி வருடம், புரட்டாசி 23
திருவள்ளுவர் ஆண்டு 2048

படிக்கப்பட்டது :

மாண்புமிகு அமைச்சர் (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்) அவர்கள் சட்டமன்ற பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்பு நாள் 18.07.2017.

*******

ஆணை :-

மாண்புமிகு அமைச்சர் (ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்) அவர்களால் 18.07.2017 அன்று சட்டமன்றப் பேரவையில் கீழ்கண்டவாறு அறிவிப்பு வெளியிடப்பட்டது.

பழங்குடியின விவசாயிகளுக்கு துரித மின் இணைப்பு திட்டம்

"பழங்குடியின விவசாயிகளின் வாழ்வில் விவசாயத்தின் வாயிலாக மலர்ச்சியையும், முன்னேற்றத்தினையும் உருவாக்கும் பொருட்டு அந்த விவசாயிகள் துரிதமாக மின் இணைப்பு பெறுவதற்கு ரூ.75,000/– வீதம் 100 பேர் பயன்பெறுவதற்காக ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.75 இலட்சம் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு வைப்பீடு தொகையாக வழங்கப்படும்".

2. மேற்காணும் அறிவிப்பிற்கிணங்க, பழங்குடியின விவசாயிகள் துரிதமாக மின் இணைப்பு பெறுவதற்கு ரூ.75,000/– வீதம் 100 பேர் பயன்பெறுவதற்காக விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ரூ.75 இலட்சத்தினை (ரூபாய் எழுபத்தைந்து இலட்சம் மட்டும்) தாட்கோ மூலமாக தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு வைப்பீடு தொகையாக வழங்க இவ்வரசாணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள வரையறைகளுக்குட்பட்டு, நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

..2..

3. மேலே பத்தி 2–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2225 – ஆதி திராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 02 பழங்குடியினர் நலன் – 796 பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டம் – மாநிலச் செலவினங்கள் – JY விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் – 09 உதவித் தொகை – 01 நடப்புச் செலவுக்கான உதவித் தொகை.
(த.தொ.கு.2225 02 796 JY 0912) "

4. மேலே பத்தி 2–ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள தொகையினை பெற்று பழங்குடியின விவசாயிகள் துரிதமாக மின் இணைப்பு பெறுவதற்கு ரூ.75,000/– வீதம் 100 பேர் பயன்பெறுவதற்காக விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ரூ.75 இலட்சத்தினை தாட்கோ மூலமாக தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு வைப்பீடு தொகையாக வழங்க மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ), சென்னை–18 அவர்களுக்கு பெற்று வழங்க இயக்குநர், பழங்குடியினர் நலம் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

5. மேலே பத்தி 2–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகைக்கான செலவினத்தை பயன்படுத்தியதற்கான சான்றினை குறிப்பிட்ட காலகெடுவிற்குள் அரசுக்கு அனுப்புமாறு பழங்குடியின நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.49530/நிதி[ஆதி(ம)பந]/2017, நாள் 06.10. 2017-இல் ஒப்புதல் பெற்று வெளியிடப்படுகிறது.

// ஆளுநரின் ஆணைப்படி //

க. மணிவாசன்,
அரசு முதன்மைச் செயலாளர் (முகூபொ).

பெறுநர்
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை–5.
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை–18.
தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், சென்னை–2.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை–18/6/35.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–8.

<u>நகல்</u>
நிதி [ஆதி(ம)பந / வ.செ.பொது–II] துறை, சென்னை–9.
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந5/கமபா/ஆதிந2/அநமு1) துறை, சென்னை–9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை முதன்மைச் செயலாளர்
அவர்களின் முதுநிலை தனிச் செயலர், சென்னை–9.
இருப்புக்கோப்பு / உபரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

10.10.17
பிரிவு அலுவலர்
10.10.17

## இணைப்பு

### துரித மின் இணைப்பு வழங்கும் திட்டத்திற்கான வரையறைகள்

**நோக்கம்:-**

பழங்குடியின விவசாயிகளில் அதிகமான நபர்கள் மின் இணைப்பு பெற்றிட நபர் ஒருவருக்கு ரூ.75,000/– வைப்புத் தொகையினை விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்திலிருந்து தாட்கோ மூலம் நேரடியாக செலுத்தி தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திடம் துரித மின் இணைப்பு பெற்றுத் தந்திட நடவடிக்கை மேற்கொள்வது.

**தகுதி:-**

விண்ணப்பதாரர் பழங்குடியின விவசாயியாக இருக்க வேண்டும்.

**நிபந்தனைகள்:-**

(அ) நிலம் விண்ணப்பதாருக்குச் சொந்தமாக இருப்பதுடன் அவரது பெயரில் நிலப்பட்டா இருக்க வேண்டும்.
(ஆ) மேற்கண்ட நிலத்தில் கிணறு அல்லது ஆழ்குழாய் கிணறு அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.
(இ) தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் மின் இணைப்பு கோரி விண்ணப்பித்திருக்க வேண்டும்.

**விண்ணப்பம் பெறும் முறை:-**

துரித மின் இணைப்பு வழங்குவது தொடர்பாக மாவட்ட ஆட்சியரின் செய்தி குறிப்பின் மூலம் நாளேடுகளில் விளம்பரம் செய்யப்படும்.

தாட்கோ மூலம் துரித மின் இணைப்பு திட்டத்தின்கீழ் மின் இணைப்பு பெற விரும்பும் பழங்குடியின விவசாயிகள் தாட்கோ இணையதள முகவரி http://application.tahdco.com மூலமாக உரிய ஆவணங்களுடன் விண்ணப்பிக்க வேண்டும். அவ்வாறு இயலவில்லையெனில் தாட்கோ அலுவலகத்தில் நேரிலும் விண்ணப்பிக்கலாம்.

**இணையதளத்தில் விண்ணப்பங்கள் பதிவு செய்யும் முறை:-**

2012–2013ஆம் நிதியாண்டிலிருந்து தாட்கோவின் அனைத்து பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களுக்கான விண்ணப்பங்கள் இணையதளம் மூலம் பெறப்படுகின்றன. இவ்வாண்டும் தாட்கோ இணையதள முகவரி http://application.tahdco.com மூலமாக தாட்கோ மூலம் துரித மின் இணைப்பு திட்டத்தின்கீழ் மின் இணைப்பு பெற விரும்பும் பழங்குடியின விவசாயிகள் விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பத்தினை படியிறக்கம் செய்தோ / நகலினையோ, கைப்பிரதி விண்ணப்பங்களையோ தாட்கோ அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு செய்ய இயலாத வகையில் விண்ணப்பிக்கும் போது விண்ணப்பத்துடன் ஸ்கேன் (scan) செய்து இணைக்கப்பட வேண்டிய ஆவணங்கள்:-

(அ) விண்ணப்பதாரர் பற்றிய விவரங்கள்.
(ஆ) புகைப்படம்.
(இ) குடும்ப அட்டை எண். / வட்டாட்சியர் கையொப்பமிட்ட இருப்பிட சான்று.

(ஈ) சாதி சான்றிதழ் எண். (எண், வழங்கப்பட்ட நாள், வழங்கியவர் மற்றும் வழங்கப்பட்ட அலுவலகம்).

(உ) குடும்ப வருமான சான்றிதழ் எண். [எண், வழங்கப்பட்ட நாள், வழங்கப்படுவதற்கான காரணம் – நேர்காணல் நடத்தப்படும் தேதிக்கு 1 1/2 ஆண்டுகள் முன்பு வரை வருமானச் சான்று பெற்றிருக்கலாம். அதாவது வருமானச் சான்று 1 1/2 ஆண்டுக்குள் பெற்றிருக்க வேண்டும்.

(ஊ) பட்டா/ சிட்டா – நிலப்பட்டா மற்றும் சிட்டா அடங்கல் நகல், "அ" பதிவேடு நகல், நிலத்தில் கிணறு அல்லது ஆழ்குழாய் கிணறு அமைக்கப்பட்டதற்கான நிலத்தின் வரைபடம்.

(எ) மின்சாரா வாரியத்தில் பதிவு செய்த இரசீது நகல்.

மனுதாரர்கள் தங்கள் பகுதியில் உள்ள இணையதள மையங்களில் விண்ணப்பங்கள் பெறுவதற்கு அறிவிக்கப்பட்ட நாட்களில் 24 மணி நேரமும் பதிவு செய்யலாம். மேலும், விண்ணப்பங்களை அந்தந்த மாவட்ட மேலாளர் அலுவலகத்திலேயே அலுவலக நேரத்தில் மட்டும் பதிவு செய்யலாம். இதற்கான விண்ணப்பம் ஒன்றிற்கு பயனாளியிடமிருந்து ரூ.20/– வசூல் செய்யலாம். இத்தொகையில் விண்ணப்பங்களை பதிவு செய்வதற்காக பணி அமர்த்தப்படும் தாட்கோ மூலம் பயிற்சி பெற்ற கணினி இயக்குபவருக்கு, ரூ.10/–உம், மீதமுள்ள தொகை புகைப்படம் மற்றும் இதர ஆவணங்களை ஸ்கேன் (Scan) செய்து பதிவேற்றம் செய்வதற்கான செலவினத்திற்காகவும் ஒதுக்கலாம். இத்தொகைக்கான கணக்கு மாவட்ட அலுவகத்தில் தனியாக பதிவேடு பராமரிக்கப்பட வேண்டும். விண்ணப்பம் பதிவேற்றம் செய்யப்பட்டவுடன் ஒப்புகை ரசீது விண்ணப்பதாருக்கு வழங்கப்பட வேண்டும்.

<u>விண்ணப்பதாரர்களைத் தெரிவு செய்யும் முறை:-</u>

மாவட்ட மேலாளர் அவர்களால் பெறப்பட்ட விண்ணப்பங்களுடன் இணைக்கப்பட வேண்டிய ஆவணங்கள் அனைத்தும் உள்ளனவா என மாவட்ட மேலாளர் அலுவலகத்தில் சரிபார்க்கப்பட்டு (Scrutiny of Application) விண்ணப்பங்கள் தெரிவு செய்யப்படும். இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட விண்ணங்கள் மீது மாவட்ட மேலாளர் மற்றும் / அல்லது உதவி மேலாளரால் தள ஆய்வு மேற்கொள்ளப்படும்.

தல ஆய்வு முடிந்த பின்னர் இலவச மின் இணைப்பு பெற வேண்டி தகுதியுள்ள விண்ணப்பதாரர்களின் பெயர் பட்டியல் மாவட்ட மேலாளர்களால் மேலாண்மை இயக்குநர் அவர்களுக்கு பரிந்துரை செய்யப்படும். இவ்வாறு அனைத்து மாவட்டங்களிலிருந்தும் பெறப்பட்ட பட்டியல் தொகுக்கப்பட்டு (Consolidate) நபருக்கு ரூ.10,000/– வீதம் வைப்புத்தொகை விண்ணப்பதாரர் பட்டியலுடன் சென்னையில் உள்ள தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் தலைமையத்திற்கு மேலாண்மை இயக்குநர் அவர்கள் விடுவிப்பார்.

தாட்கோவினால் பெறப்பட்ட விண்ணப்பதாரர் பட்டியல் உரிய மாவட்ட மின் வாரிய அலுவலகங்களுக்கு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் தலைமையகத்திலிருந்து தயார் நிலை பதிவு செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ள அனுப்பப்படும்.

தாட்கோ மூலம் துரித மின் இணைப்பு திட்டத்தின் கீழ் மின் இணைப்பு பெறுவதற்கு தயார் நிலையினை மின்வாரிய அலுவலகத்தில் பதிவு செய்த விண்ணப்பதாரர் பட்டியலினை தொகுத்து பிரதி மாதம் இறுதியில் மீதமுள்ள தொகை ரூ.65,000/– வழங்கும் பொருட்டு தாட்கோவிற்கு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் தலைமையகத்திலிருந்து

அனுப்பப்படும். அவ்வாறு பெறப்பட்ட பட்டியல் அனைத்து மாவட்ட தாட்கோ மேலாளர்களுக்கு அனுப்பப்பட்டு, அவர்களால் முன்மொழிவு செய்யப்பட்டு பெறப்பட்ட பட்டியல் தொகுக்கப்பட்டு (Consolidate) மீதமுள்ள தொகை ஒருவருக்கு ரூ.65,000/– வீதம் விண்ணப்பதாரர் பட்டியலுடன் சென்னையில் உள்ள தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் தலைமையகத்திற்கு தாட்கோ மேலாண்மை இயக்குநர் அவர்கள் விடுவிப்பார். இவ்வாறு விண்ணப்பதாரர் ஒருவருக்கு மொத்த தொகை ரூ.75,000/– வீதம் தாட்கோ மேலாண்மை இயக்குநர் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் தலைமையகத்திற்கு விடுவிப்பார்.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் தலைமையகத்திலிருந்து மின் இணைப்பு வழங்கப்பட்டவர் / வழங்கப்படாதவர் பட்டியலுடன் மின் இணைப்பு வழங்கப்படாதவரின் வைப்பீட்டுத் தொகை ஒருவருக்கு ரூ.75,000/– வீதம் தாட்கோவிற்கு திரும்ப அனுப்பப்படும்.

விண்ணப்பதாருக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதா என்பதை மாவட்ட மேலாளர், தாட்கோ சரிபார்த்து மேலாண்மை இயக்குநர் அவர்களுக்கு அறிக்கை அளிக்க வேண்டும். இதன் விவரத்தினை இணையதளத்திலும் மாவட்ட மேலாளர், தாட்கோ அவர்களால் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

க. மணிவாசகன்,
அரசு முதன்மைச் செயலாளர் (முகூபொ)

//உண்மை நகல்//

ஜா. தங்கம்
10.10.17
பிரிவு அலுவலர்

10/10/17